தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, ஐப்பசி 28

2008 நவம்பர் 13, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 21. *(குறுக்கீடுகள்)*

2. முக்கிய பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை சட்டக் கல்லூரியில் நடந்த கலவரம் குறித்து இப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று. . .

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் Zero hour-ல் எழுப்புங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதுகுறித்து எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இதுகுறித்து எழுதியா கொடுக்க முடியும்? கேள்வி நேரம்

முடியட்டும். (குறுக்கீடுகள்) சரி, எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் (குறுக்கீடுகள்) மற்ற கட்சித் தலைவர்களும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார், நீங்கள் அமைச்சராக இருந்தவர்கள். உங்களுக்குத் தெரியாததல்ல. இது நல்ல பழக்கமல்ல, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் மின்சாரப் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கடுத்து சட்டக் கல்லூரி பிரச்சினையையும் இன்று எடுப்பதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். எனவே, கேள்வி நேரம் முடிந்தவுடன் முதலிலே மின்சாரத்தைப்பற்றி விவாதித்துவிட்டு, பிறகு சட்டக் கல்லூரிபற்றியும் விவாதிப்பதற்கு . . (குறுக்கீடு)

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த ஆர்டரில் எடுக்க வேண்டுமென்று நான் பார்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: நேற்றையதினம் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்தான் மின்சாரப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இன்றையதினம் முதலில் மின்சாரம்; பிறகு சட்டக் கல்லூரிப் பிரச்சினை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு எடுக்கிறோம் என்று சொல்லியாகிவிட்டதல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் இருக்கிறது, உட்காருங்கள். நீங்கள் Rules-ஐப் பார்த்தீர்களா? (குறுக்கீடு) நான் பார்த்தேன், பார்த்தேன். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்த பிறகு எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்த பிறகு எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) முதலில் கேள்வி-பதில் எடுக்கவேண்டும் என்பதுதான் விதியில் இருக்கிறது. அது முடிந்த பிறகு zero hour-ல் எடுக்கலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.